செ.கு.எண் 113 நாள் 8-10-2010

# பாரம்பரியக் கட்டடங்களைக் காப்பது நமது கடமை

08.10.2010

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மற்றும் தலைவர், நகர வளர்ச்சி, திரு. பரிதி இளம்வழுதி அவர்களின் உரை:

சென்னைப் பெருநகரப் பகுதியில் பாரம்பரியமிக்க கட்டிடங்கள்
மற்றும் இடங்களை பாதுகாத்தல் குறித்து நடக்கும்
ஒரு நாள் கருத்தரங்கத் தொடக்க விழாவை
தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும்
சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின்
துணைத்தலைவர் திருமதி சூசன் மேத்யூஸ் இ.அ.ப. அவர்களே,
வரவேற்புரை ஆற்றிய
சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின்
உறுப்பினர் செயலர் திரு. தயானந்த் கட்டாரியா அவர்களே,
நன்றி கூற இருக்கும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின்
முதன்மை நிர்வாக அலுவலர் திரு. வெ. கண்ணுச்சாமி இ.அ.ப.
அவர்களே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உயர்
அலுவலர்களே, பல்வேறு மாநிலங்களிலிருந்து இங்கு வருகைதந்து
தங்கள் அனுபவங்களை படிப்பினையாக பகிர்ந்து கொள்ள
வந்திருக்கும் வல்லுநர்களே பெரியோர்களே, தாய்மார்களே,
பத்திரிக்கைத்துறை நண்பர்களே,
உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

* கட்டடங்கள்தான் மனித இனத்தின் முதல்
பொறியியல் வெளிப்பாடு என்று சொல்லலாம்.
மனிதன் குகைகளில் இருந்தும்,மரப்பொந்துகளில் இருந்தும்
வெளிவந்து தான் வாழ்வதற்கு கட்டடங்களைக் கட்டிக்கொண்டான்.

* மனித நாகரிகத்தின் முதல் பாய்ச்சல் என்பதே
அவனது வாழ்விடத்தை அமைத்துக் கொண்ட கட்டடங்களில்
இருந்துதான் தொடங்குகிறது.

* எல்லாவற்றிற்கும் பாரம்பரியம் உண்டு;
எல்லோருக்கும் பாரம்பரியம் உண்டு.
ஆனால்,எல்லோரும் அதைக் காப்பாற்றி வைப்பதில்லை.
தமது அடுத்த தலைமுறைக்கு
தம்மைப் பற்றிய செய்திகளை
உலகில் மிகச்சில இனமக்களே விட்டுச்சென்றுள்ளனர்.
அவர்களில் நமது திராவிட இன மக்கள் முக்கியமானவர்கள்.

* திராவிட இன நாகரிகத்தின் உன்னத அடையாளங்களாக
சிந்து சமவெளி நாகரிகமான மொஹஞ்சதாரோ, ஹரப்பா
நினைவுச் சின்னங்கள் சாட்சி கூறுகின்றன.
அவை உருவாகி பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால்
நம்மால் அந்த நாகரிகத்தின் அடையாளங்களை
ஆய்வுசெய்து கண்டறியும் அளவுக்கு
அந்தக் கட்டுமானங்கள் உறுதியானவையாக
இருந்திருக்கின்றன என்றால்,
அவர்கள் எவ்வளவு வலுவான கட்டடங்களைக்
கட்டியிருக்கவேண்டும்! இதனை நினைக்கும் போது,
தமக்குப் பின்னால் வரும் தலைமுறைகள்
தம்முடைய நாகரிகத்தைப் பற்றி அறியவேண்டும்
என்ற நுண்ணறிவோடுதான்
அதனை உருவாக்கியிருக்கிறார்கள்
என்று கருத வேண்டியிருக்கிறது.

* பண்டைய இலக்கியங்கள் பலவற்றையும்,
கலை வெளிப்பாடுகள் பலவற்றையும்
நம்முடைய முந்தைய தலைமுறைக்கு
காப்பாற்ற முடியாமல் போயிருக்கிறது என்பதை
வரலாறு சொல்கிறது.

ஆனால், கட்டடங்களைக் காப்பாற்ற முடிந்திருக்கிறது.
அந்தச் சின்னங்கள் தான்
நம்முடைய நாகரிகத்தின் செழுமையை,
பண்பாட்டின் பெருமையை எடுத்துச் சொல்கின்றன.

* தமிழகத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகக்
கட்டப்பட்ட கோவில்கள் பலவும் கற்களால் கட்டப்பட்டவை.
அண்மையிலே ஆயிரம் ஆண்டுகண்ட
ராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில் கற்களால்
கட்டப்பட்டதால்தான் நாம் அதற்கு
விழாக்கொண்டாட முடிந்தது.
அதில் உள்ள கல்வெட்டுகளின் வாயிலாக
அன்றைய வரலாற்றை அறியமுடிந்தது.
இன்னும் ஏராளமாக ஆய்வுசெய்வதற்கும்
அந்தக் கோவில்கள் உதவுகின்றன.

* இந்த தருணத்தில் நீங்கள்
இன்னொரு செய்தியையும் நினைத்துப் பார்க்கவேண்டும்.
அண்மையில் சில மாதங்களுக்கு முன்
ஆந்திர மாநிலத்தில் ஒரு கோவில் கோபுரம்
இடிந்துவிழுந்தது என்ற செய்தி உங்களுக்குத் தெரியும்.
அந்தக் கோபுரம் களி மண்ணால் கட்டப்பட்டது.
அதனால்தான் அது ஒரு குறிப்பிட்ட காலத்தில்
விழவேண்டியதாகிவிட்டது.ஆனால்,
தமிழகக் கோவில்கள் இன்றும் கம்பீரமாக நிற்கின்றன
என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால், நமது முன்னோர்களின்

கட்டடத் தொழில்நுட்ப அறிவு மிகச் சிறந்ததாக,
நுட்பமாக இருந்திருக்கிறது
என்பதை நம்மால் உணரமுடியும்.

இந்த அடிப்படையில்தான்
திராவிட இயக்க ஆட்சியை நடத்திவரும்
மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்,
தான் ஆட்சியில் உள்ளபோது கட்டப்படும்
கட்டடங்களை திராவிட கட்டடக்கலை வடிவமைப்பில் அமைப்பார்.
அண்மையிலே கட்டப்பட்டுள்ள புதிய தலைமைச் செயலக வளாகம்
கூட திராவிட கட்ட்டக் கலையை இணைத்து
நவீன முறையில் கட்டினார்கள்.

பாரம்பரியக் கட்டடங்கள் வெறும் கற்களாலும்,மண்ணாலும்
கட்டப்பட்டது அல்ல; அது கட்டப்பட்டுள்ள காலகட்டத்தின்
வரலாற்றையும்,பண்பாட்டையும்
நமக்கு எடுத்துச் சொல்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.
அதுமட்டுமல்ல, அந்தக் காலத்தின்
கட்டடத் தொழில் நுட்பத்தையும் எடுத்துக் காட்டுகிறது.
உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்,
சிமெண்ட் போன்ற பொருளோ,
அல்லது சுண்ணாம்புக்காரையோ இல்லாமல்
ஒரு புதிய தொழில் நுட்பத்தில் தஞ்சைப் பெரியகோவில்
கட்டப்பட்டதாகச் சொல்கிறார்கள்.
இது எப்படி சாத்தியமானது என்பதை
இன்றைய பொறியியல் வல்லுநர்கள்
வியந்து ஆய்வுசெய்கின்றனர்.

சென்னையிலே பார்த்தீர்களானால்,
பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட
கட்டடங்கள் பல உள்ளன.
அவர்களின் கட்டுமானச் சிறப்பை
நமக்கு அந்தக் கட்டடங்கள் எடுத்துச் சொல்கின்றன.
லண்டன் சென்றுவந்தவர்களுக்குத் தெரியும்.
நம்முடை சென்ட்ரல் ரயில் நிலையத்தின்
கட்டுமானத்தைப் போலவே லண்டனில் உள்ள
செயிண்ட் பன்க்ராஸ் (st.pancras station) ரயில் நிலையத்தின்
கட்டுமானமும் இருக்கும்.
சென்ட்ரல் அருகே உள்ள விக்டோரியா மண்டபம் இருக்கிறது.
அந்தக் கட்டடத்தைக் காணும் போது
ஆங்கிலேயர்களின் கட்டுமானச் சிறப்பை அறியமுடியும்.
பழுதடைந்துள்ள அந்த விக்டோரியா மண்டபத்தை
நம்முடைய தலைவர் கலைஞரின் அரசு
பழைமை மாறாமல் புதுப்பித்துக் கொண்டிருக்கிறது
என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டிடம்,
விக்டோரியா மெமோரியல் ஹால்,
சென்னைப் பல்கலைக்கழக செனட் ஹால்,
சென்னை மியுசியம் கட்டிடம்
போன்ற ஏராளமான பாரம்பரியமிக்க கட்டிடங்கள்
சென்னையில் அமைந்துள்ளன.
இவை அனைத்தையும் நேர்த்தியாக வைத்திருக்கவும்
எதிர்வரும் தலைமுறைக்கு எடுத்துக்காட்டவும்
இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகிறது.
அந்தவகையில் மாநகரில் உள்ள பாரம்பரியமிக்க கட்டிடங்கள் மற்றும்
இடங்களை கணக்கிட்டு அதன் தொண்மை, திடம் ஆகியவற்றை
ஆய்ந்து மேலும் இந்த அரசு என்ன செய்திட வேண்டும்
என்பதை எடுத்துக்கூற 'பாரம்பரிய பாதுகாப்புக்குழு'
ஒன்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது
என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அறிவியல் வளர்ச்சியின் விளைவாக
எல்லாவற்றிலும் புதுமையான செயற்கையான தயாரிப்புகளே
இந்தக்கால தலைமுறையால் விரும்பும் நிலை
இப்போது நிலவுகிறது.
இச்சூழல் இன்னும் சில காலத்தில் மாறக்கூடும்.,
அப்போது பழைமையைத் திரும்பிப் பார்க்கும்
ஆர்வம் ஏற்படலாம்.
அண்மையில் கோவையில் நடைபெற்ற
உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிலும்,
தஞ்சையில் நடைபெற்ற பெரிய கோவில்
1000 ஆவது ஆண்டு விழாவிலும்
தமிழக அரசால் நடத்தப்பெற்ற கண்காட்சி
மாபெரும் வெற்றி பெற்றது.
பல லட்சக்கணக்கான மக்கள் அதனைக் கண்டுகளித்தனர்.
குறிப்பாக இளைய தலைமுறையினர் ஏராளமானவர்கள்
பார்த்து ரசித்தனர்.
இதே போலத்தான் பாரம்பரியக் கட்டடங்களையும்
அதிசயமாகப் பார்க்கும் நிலை வரும்.
நமது கட்டக் கலை சிறப் எதிர்காலம்அறியவேண்டுமானால்,
பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் சின்னங்களாக
உள்ள பழைமையான கட்டுமானங்களை பராமரித்துப்
பாதுகாக்கவேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில்
பாரம்பரியச் சின்னங்கள் ஏராளமாக உள்ளன.
பல்வேறு மாவட்டங்களில் கோவில்களும்,
பழம்பெரும் ஓவியங்களையும்,சிற்பங்களையும் தாங்கிய
மலைகள்,குகைகள் ஆகியவை உள்ளன.
சென்னையில் ஆங்கிலேய ஆட்சிகாலத்திய
கட்டடங்கள் உள்ளன.
செட்டிநாட்டில் அதாவது காரைக்குடி பகுதியில்

நகரத்தார் சமூகத்தினரின்
அரண்மனை போன்ற வீடுகள் ஏராளமாக உள்ளன.
பாரம்பரிய சுற்றுலா திட்டங்களில்
காரைக்குடியும் சேர்க்கப்பட்டுள்ளது.
உலக நாடுகளில் இருந்து வரும் பயணிகள்
அதனைப் பார்த்துச் செல்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும்விட நமக்கு
பாரம்பரியச் சின்னங்களைக் காப்பதில் கவனம் வேண்டும்
என்று கருதுகிறேன். ஏனென்றால்,
நம் மொழி உலகின் தோன்றிய
முதல் மொழி மட்டுமல்ல,
தமிழ் ஒரு செம்மொழி.
ஆகவே மற்ற இன மக்களைக் காட்டிலும்
நாம் பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்கவழக்கங்களால் முன்னவர்கள்.
எனவே, நம்முடைய பாரம்பரியச் சின்னங்களை
அழியாமல் காப்பாற்றவேண்டும்.
அதற்கு சிறப்பு முயற்சிகளை எடுக்கவேண்டும்.
ஒவ்வொரு குடிமகனுக்கும் அந்தக் கடமை உள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பிற நகரங்களிலிருந்து
அந்த நகரங்களில் பாரம்பரியத்தை பாதுகாக்க
எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை
விரிவாக எடுத்துரைக்க
வெளி மாநிலங்களிலிருந்து வல்லுநர்கள் வந்துள்ளார்கள்.

இவர்களின் அனுபவங்கள்
நமக்கு சிறந்த படிப்பினையாக விளங்கும்
என்று நம்புகிறேன்.

இந்த ஒருநாள் கருத்தரங்கில் பங்கேற்கும்

நீங்கள் அனைவரும்

உங்கள் அனுபவத்தின் அடிப்படையில்

அளிக்கும் கருத்துக்கள் சென்னை நகரில்

பாரம்பரிய கட்டிடங்களை காக்க பெரிதும் உதவும்

என்ற நம்பிக்கையுடன் மீண்டும் இன்று மாலை

உங்களை சந்திப்பேன் என்று கூறி

இக்கருத்தரங்கு வெற்றியடைய வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை.
சென்னை-9